Written by Administrator
Tuesday, 28 July 2009 11:29 -

□□□□□□□□

28.07.2009

கட்டட அனுமதி விண்ணப்பம்

உள்ளூர் திட்ட குழுமத்துக்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்

மாநகராட்சியில் தாமதம் தடுக்க அதிரடி

கோவை, ஜூலை 28: கட்டட அனுமதி விண்ணப்பத்தை மாநகராட்சி முடக்கி வைப்பதை தடுக்கும் நோக்கத்தில் நகரமைப்பு பிரிவு புதிய உத்தரவை வெளியிட்டுள்ளது. இதன்படி, நேரடியாக இனி உள்ளூர் திட்ட குழுமத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

200 சதுர மீட்டர் பரப்பளவுக்குள் வீடு கட்ட வேண்டுமென்றாலும், 100 சதுர மீட்டருக்குள் கடை, வணிக நிறுவனம் கட்ட வேண்டும் என்றாலும் மாநகராட்சியின் நகரமைப்பு பிரிவில் விண்ணப்பம் தரவேண்டும். விண்ணப்பம், கட்டட அமைப்பு, பிளான் உள்ளிட்ட ஆவணங்களை பொறியாளர், கிராமநிர்வாக அலுவலர்கள் மண்டல அளவில் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

200 சதுர மீட்டருக்கு அதிகமான பரப்பளவுக்கட்டடங்கள் தொடர்பான விண்ணப்பங்களையும் மாநகராட்சியினர் பெற்று, சரிபார்த்து பின்னர் உள்ளூர் திட்ட குழுமத்துக்கு அனுப்பி வருகின்றனர். தற்போது கோவை உள்ளிட்ட மாநகராட்சிகளில் கட்டட அனுமதி பெற பல மாதங்களாகி விடுகிறது. சீனர், அதுமதிவை எதிர்பார்க்காமல் கட்டடங்களை கட்டி முடிப்பதுவெகுவாகக்கூடக் கிறது.

விண்ணப்பங்களின் நிலைமை தொடர்பாக விண்ணப்பதாரர்கள் தெரிந்து கொள்ளவும் முடியாது திராகரித்தால் கூட அதற்கான காரணங்களைக்கூடவெளிவருவதுமில்லை. மாநகராட்சியிற்நகரமைப்புப்பணியினை விரிவுபடுத்த 'ஆட்டோ டி.சி.ஆர்' என்ற தனி சாப்ட்வேர் மூலம் ஒருங்கிணைத்த கம்ப்யூட்டர் ஆவணபராமரிப்பிடம் வந்தபோதும் இயற்சான ஈரவில்லை.

கட்டட அனுமதிவிண்ணப்பங்களை பரிசீலிக்க கடலஞ்சம்பெறப்படுவதாகவும், லஞ்சதொகை அதிகரிக்கவேண்டுமென்பதாகவும் தாமதம் செய்து வருவதாகவும் புகார் எழுந்துள்ளது.

தாமதத்தால் ஏற்படும் பிரச்னைகளை களைய சென்னை அண்ணாசாலையில் நகரமைப்பு இடப்பிரிவு கமிஷனர் அலுவலகத்தில் உயரதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நடத்தி முன்றுமுறை இது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இதைதொடர்ந்து நகரமைப்பு இடப் துறை கமிஷனர் மாநகராட்சி, உள்ளூர்திட்ட குழுமத்திற்கு ஒரு சுற்றறிக்கை வெளியிட்டார். இதில், 'கட்டட அனுமதி வழங்குவதில் வேகம் காட்டவேண்டும். மாநகராட்சிக்குவிண்ணப்பங்களை அனுப்பி, அவர்கள் பரிசீலனை செய்து பின்னர் உள்ளூர் திட்ட குழுமத்திற்கு செல்லவேண்டியிருக்கிறது. அப்படி செல்வதால்காலதாமதம் அதிகமாகி வருகிறது. எனவே ஒரே நேரத்தில் மாநகராட்சிக்கும், உள்ளூர் திட்ட குழுமத்திற்கும் விண்ணப்பம் தரலாம். தேவையில்லாமல்ஒருதுறையினர் தாமதம் செய்வதை தவிர்க்க முடியும்.

அந்த இடத்தில் உள்ளமைமாக என்ன பிரச்னை இருக்கிறது அனுமதி வழங்குவதில் தடைஏற்படுகிறதா என உடனடியாக கண்டறிந்து விடலாம். உள்ளூர் திட்ட குழுமம், நகரமைப்பு பிரிவினர் இணைந்து செயல்படவேண்டும்' என தெரிவித்துள்ளார். இந்த உத்தரவு கடந்த 20ம் தேதி முதல் பயன்பாட்டிற்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.